

நாஞ்சி

விலை 20 காசு

4—10
1-1?-67

மக்கள் மனதறிந்து செயல்படுகிறது கழகம்!

கழகச் செயல்களை மக்கள் ஆதரிக்கிறார்கள்!!

தமிழகச் சாதனைகள் சாமான்யமானதல்ல!

கழக அரசுபற்றி 'ஹிம்மத்' இதழ் படப்பிடிப்பு!

"மக்களின் கருத்தே அனைத்துமாகும்; மக்கள் பேராதரவுடன் செய்யப்படும் எதுவும் தோல்வியடைவதில்லை. மக்களாதரவு இன்றி எதுவும் வெற்றியடைய முடியாது' — என்பது ஆபிரகாம் லிங்கனுடைய பொன்மொழியாகும் இது அமெரிக்க மக்களுக்காகக் கூறப்பட்டதென்றாலும், இன்று வரிக்கு வரி அந்த பொன்மொழி தமிழக மக்களுக்குப் பயன்படுத்திக் காட்டும் சிறப்புக்குரியதாகும்.

1920-ம் ஆண்டு தொடக்கத்தில் மகாத்மா காந்தியடிகள் தமிழகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது தமிழக மக்களின் எளிமையைக் கண்டு வியந்து, தானும் எளிய ஆடையே யுடுத்துவதாக மேற்கொண்ட விரதம், மக்கள் மனதைத் தொடும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அதுபோலவே, தி. மு. கழக அரசாங்கமும், அதன் தலைமையும் மக்கள் மனமறிந்து ஒழுகும் தனித்திறமை படைத்திருக்கிறதானது, அதன் முன்னேற்றத்திற்குரிய சிறந்த வழியாகும்.

முதலாவதாக, தி. மு. க. அரசு, வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையில் 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' என்று ஒளிவிளக்குகளால் தாய்மொழியான தமிழில் பொறித்திருக்கிறது. அடுத்து போக்குவரத்துப் பணி மனையிலும், 'தமிழக அரசுப் போக்குவரத்து' என்று தமிழில் பெயர் பொறித்துள்ளது. பேருந்துகளின் உள்ளே வள்ளுவர் குறளையும், அவரது திருஉருவப் படத்தையும் பொறித்துள்ளது. இவைகள் யாவும் சாமான்ய மக்களது உள்ளங்களை வருடுவதாகும்.

சென்னை அரசின் சின்னமான கோபுரத்தைச் சுற்றியுள்ள 'சத்ய மேவ ஜயதே' என்ற வடமொழித் தொடரை அகற்றிவிட்டு அந்த இடத்தில் 'வாய்மையே வெல்லும்' என்று தீட்டியிருக்கிறது.

எதிர்க் கட்சியான காங்கிரசும் முன்னாள் மத்திய அமைச்சரான திரு. அளகேசனும்கூட, இது ஒரு 'பெரிய' காரியமா? எனக் கேட்டார்கள்! ஏன் இப்படியான 'சின்ன' காரியத்தில் அவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று பேசத் தொடங்கினார்கள்!

கழகத்தின் பதில் அத்தகையோரின் வாயை அடைத்தது! கடந்த 20 ஆண்டுக் காலத்தில் நீங்கள் பதவி வகித்தபோது, இந்தச் 'சிறிய' காரியத்தைக்கூட நீங்கள் செய்யாதிருந்தது ஏன்? என்ற வினா, அவர்களை அதிரவைத்தது!

கழகத் தலைவர்கள் அறிவார்கள், மக்களின் ஆதரவு தங்கள் பக்கம் திரண்டிருக்கிறது என்று! அதனாலே மக்கள் மனதை வருடிவரும் இது போன்ற 'செயற்கரிய' செயல்களைச் செய்ய அவர்களால் முடிகிறது!

அது மாத்திரமா? சட்ட மன்ற அன்றாட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக திருக்குறள் பாக்களின் வாழ்த்தொலியோடு தொடங்கினார்கள்! பட்ஜெட் தொடர்க் கூட்டத்தின் இறுதி நாளன்று முதலமைச்சர் அவர்கள், 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கக் கோரும் தீர்மானத்தைக் கொணர்ந்து, 'தமிழ் நாடு வாழ்க' என முழங்க, வந்திருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட சேர்ந்து 'வாழ்க' என்று முழங்கியது, இவைகளுக்கெல்லாம் தலையாய ஒரு நிகழ்ச்சியாகும்!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தண்டிக்கப்பட்டவர்களை, நிபந்தனை ஏதுமற்ற முறையில் விடுதலை செய்தது கழக அரசு. இது சிறப்பான மற்றொரு அம்சமாகும். இது கண்டுக் கொதித்தெழுந்த காங்கிரஸ், இதனை எதிர்த்தது. கொள்ளை, தீ வைத்தல் முதலான குற்றமிழைத்தவர்கள் பலரையும் இப்படி விடுதலை செய்திருக்கக்கூடாது என்று அவர்கள் எதிர்த்தனர்.

இது ஒருகால் சரியானதாகவே இருக்கக்கூடும். ஆனால், காங்கிரஸ் இந்த போராட்டம் தொடர்பான இரகசிய தஸ்தாவேஜிகளை யெல்லாம் தீயிட்டு விட்டது மட்டும் எப்படிச் சரியானதாக இருக்க முடியும்?

அமைச்சர்கள் ரூ. 500 மட்டுமே ஊதியம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றதும், அதையும் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை அமுல் படுத்தும் வரையில் யாரும் அந்த ஊதியத்தைக் கூடப் பெற்றுக்கொள்ளக்கூடாது என்று அறிவித்ததும் மக்கள் மனதைத் தொடும் மற்றொரு சீரிய அம்சமாகும்! இதனையும் தெளிவாக திரு. அண்ணாதுரை அறிந்தே இருந்தார்!

திரு. பக்தவத்சலம் போன்றவர்கள், 'சம்பளம் வாங்குவதில்லை' என்றால் அவர்கள் தம்வாழ்க்கையை எப்படி நடாத்துவார்கள் என்று கேலி பேசத் தொடங்கியவுடன், அதன் தலைவர்கள் 'நாங்கள் ஊதியம் பெறவில்லையானால், மக்களே எங்களுக்கு ஊதியம் தருவார்கள் என்று பேசத் தொடங்கியவுடன், பல இடங்களில் பொதுமக்களின் மென்மையான இதயம் வருடிவிடப்பட்டு நிதி திரட்டிக் கொடுக்கத் தொடங்கினார்கள்.

ஆனால் இந்த நிதியுதவிகளை எந்த அமைச்சரும் எடுத்துக் கொள்ளவில்லை; மாறாக அதனை முதலமைச்சரின்

(4-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10   ஆறுமாதம் ரூ 5

மலர் 4   1 10 67   இதழ் 10

நல்லவழி அதுதான்!

"ஒவ்வொரு மாநிலமும் தனி உணவு மண்டலமாக நீடிக்க வேண்டுமானால், நாம் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும்;

> அதிகமாக விளையும் மாநிலங்கள் பற்றாக் குறை மாநிலங்களுக்கு உணவு உதவி செய்வதாக இருந்தால், மேற்கண்ட முறை சிறந்ததாகும்;
>
> அதற்காக உபரி மாநிலங்கள் தகுந்த உறுதிமொழி தரவேண்டும்."

—என்று அண்மையில் இந்தியத் தலைநகரில் கூடிக் கலந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூறி இருக்கிறார்.

> "70 லட்சம் டன் உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்யவேண்டும்."

என்ற முடிவோடு இருநாட்கள் நடைபெற்ற மாநாடு முற்றுப் பெற்றிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஒரே உணவு மண்டலமாக இயங்கவேண்டும் — இயங்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு கூட்டப்பட்ட மாநாடு "பற்றாக் குறை மாநிலங்களுக்கு உபரி மாநிலங்கள் உணவு உதவி செய்வதாகத் தகுந்த உறுதிமொழி பெற்றுக்கொண்டு" தனித்தனி மண்டலங்களாகவே இயங்க ஒப்புக்கொண்டிருக்கிறது மத்திய அரசு.

மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பதிலாகக் கலந்துகொண்ட உணவு அமைச்சர் மாண்புமிகு மதியழகன் அவர்கள், தமிழகத்தின் நிலையைத் துல்லியமாக விளக்கிக் காட்டி இருக்கிறார்கள்.

கேரள முதல்வர் திரு. நம்பூதிரிபாடு அவர்களது குற்றச்சாட்டை மறுக்கும் தொடர்பில் தமிழகம் உணவுத் துறையில் பிற மாநிலங்களுக்கு எப்படி எப்படியெல்லாம் உதவி வந்திருக்கிறது என்பதையும் எடுத்துக்காட்டி, அதே வேளையில், பிற மாநிலங்களிலிருந்து தமிழகம் பெறவேண்டிய உணவு வகைகள் எந்த அளவுக்குக் குறைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெளிவுபடுத்திக் காட்டி இருக்கிறார்.

70 லட்சம் டன் உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்யவும் தனித் தனி மண்டலங்களாக இயங்கவும் 'தகுந்த உறுதி மொழி'களைப் பெற்றுக் கொண்டுள்ள மத்திய உணவு அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள், தமிழக உணவு அமைச்சர் அவர்களது சில கோரிக்கைகளுக்குப் பதிலிறுக்கவில்லை.

தமிழகத்தின் பருப்பு வகைகளின் தேவை பிற மாநிலங்களிலிருந்து எதிர்பார்த்து நிறைவு செய்து கொள்ளவேண்டிய நிலையிலிருப்பதாகும்.

இதனை உபரியாக உற்பத்தி செய்யும் சில மாநிலங்கள், அவற்றை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யத் தடை விதித்துள்ளதும், சில மாநிலங்கள் ஏற்றுமதியின்மீது வரிவிதித்தும் விட்டிருக்கிற நிலையில் தமிழகம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் டன் அளவுக்குப் பெற்றுத் தீரவேண்டியுள்ளது.

தமிழக உணவு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுக்கு இதுவரையில் 5000 டன்கள் மட்டுமே கிடைத்திருக்கிறது என்றும் மேற்கொண்டு தேவைகளை தமிழகத்துக்குக் கிடைக்கச் செய்ய மத்திய அரசு வழிவகைகள் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உணவுப் பொருள் என்பது, வெறும் அரிசி மட்டுமோ, கோதுமை மட்டுமோ அல்ல.

அரிசி, அல்லது கோதுமையுடன் சமையலுக்குப் பயன்படும் அனைத்துப் பொருள்களுமே, உணவுப்பண்டப் பட்டியலில் இடம்பெற வேண்டியவையாகும்.

இந்த வகையில் பார்த்தால் சுமார் இரண்டரை லட்சம் டன் பருப்புத் தேவை எங்கே? 5000 டன் கிடைத்த அளவு எங்கே?

உபரியாக விளைவிக்கும் மாநிலங்கள் பற்றாக்குறை மாநிலங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று மத்திய உணவமைச்சர் பெற்றுக்கொண்ட தகுந்த உறுதி மொழியில், தமிழகத்தின் இந்தவேண்டுகோளும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்றே நம்புகிறோம்.

பருப்பு மட்டும் இந்த நிலையில் இல்லை. கோதுமையிலும் கூடத்தான் — சர்க்கரையிலும்தான் என்பதனையும் திரு. மதியழகன் தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட கோதுமையின் அளவில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இந்த ஆண்டு அனுப்பப்பட்டிருக்கிறது; அதாவது இந்த ஆண்டுக்கு சுமார் 39,500 டன் கோதுமையும் 87,000 டன் கோதுமைப் பொருள்களும் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளதென்றும், மேலும் 1,25 000 டன் கோதுமையும், 1 50,000டன் கோதுமைப் பொருள்களும் தேவையெனவும் கேட்டிருக்கிறார்.

சர்க்கரை விவகாரத்தில் இதுவரையில் தமிழகத்துக்கு ஆண்டுக்கு சுமார் 16,000 டன் சர்க்கரை கிடைத்து வந்திருக்க இந்த ஆண்டில் 9,600 டன் மட்டுமே கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

முகப்பில் :

தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள்:

ம. பொ. சி., தியாகராயநகர்.

என். கிருட்டிணன், M. A. B. L., காஞ்சிபுரம்.

எம். ஜி. இராமச்சந்திரன், பரங்கிமலை.

தேவைகளையும், கிடைத்திருப்பவைகளையும் வரி சைப்படுத்தி—முன் கிடைத்தவைகளையும், இப்போது கிடைப்பனவற்றையும் ஒப்பிட்டுப்பார்த்தால், தமிழகம் மத்திய அரசினால் மாற்றாந்தாய் மனப்பான்மையிலே நடத்தப்படுவது தெளிந்த உண்மை என்கிறது.

பற்றாக்குறை மாநிலங்களுக்கு உபரிமாநிலங்கள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டு உறுதிமொழி பெற்றுக்கொண்டிருக்கிற மத்திய உணவு அமைச்சர் இவற்றையெல்லாம் கவனமாகப் பரிசீலிப்பார் என்றே நம்புகின்றோம்.

“நீ அவல் கொண்டுவா; நான் உமி கொண்டு வருகிறேன். இரண்டையும் கலந்து, ஊதி ஊதி சாப்பிடுவோம்”—என்று நகைச்சுவையாகப் பேசுவார்கள்.

தமிழகத்திடமிருந்து அரிசியைமட்டும் கட்டாயப் படுத்திக் கேட்டுப் பெற்றுக்கொள்ள நினைக்கும் மத்திய அரசு, தமிழகம் பருப்பு வகைகளையும், கோதுமை, சர்க்கரை முதலானவைகளையும் போதிய அளவு பெற்றுக் கொள்ளவும் வசதிசெய்து தர கடமைப்பட்டிருக்கிறது.

அதேபோல், பருப்பு வகைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்ப தடைவிதித்துள்ள சில மாநிலங்களுக்கு உரிமைகள் கிடைத்திருப்பதுபோல, தமிழகத்துக்கும், வெல்லம், கண்டசாரி சர்க்கரை முதலான முக்கியப் பண்டங்களை வெளி மாநிலங்களுக்குக் கொண்டுசெல்ல தடை விதிக்க தமிழகத்துக்கு அனுமதி நல்கவும் வேண்டும்.

அதுதான் “தகுந்த உறுதிமொழி”களைப் பெற்றுக் கொண்டு, 70-லட்சம் டன் உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்துகொள்ள எடுத்துக்கொண்ட முடிவுக்கு—நல்வழி காட்டுவதாக அமையும்!

*

2- பக்கத் தொடர்ச்சி

நிவாரண நிதியில் சேர்ப்பித்தார்கள்.

இவையாவையும் மக்கள் கழகத்தின் பக்கம் நெருங்கி இருக்கிறார்கள் என்பதும், மக்கள் மனமறிந்து கழகம் செயல்படுகிறது என்பதும் எடுத்துக் காட்டப் பயன்படுவதாகும்.

அதோடு, திரு. அண்ணாதுரையவர்கள் அறிவித்தபடி சொந்த வீடுள்ள எந்த அமைச்சர்களும் அரசாங்க வீடுகளுக்குக் குடிபுகக் கூடாதென்றும், தங்கள் சொந்த இல்லங்களிலேயே இருக்க வேண்டும் என்றும், பெரியகார்களைப் பயன்படுத்தாமல் சிறிய கார்களையே பயன்படுத்த வேண்டும் என்றும், பெரிய கார்களை வெளி நாட்டு விருந்தினர்கள் பயன்படுத்த மட்டுமே உபயோகிக்கவேண்டும் என்றதும் கூட மக்களது மனதைத் தொடக் கூடியதாகும்!

திரு. அண்ணாதுரை அவர்களது இத்தகைய செயல்கள், 1937-ல் காங்கிரஸ் தலைவர்கள் முதன் முதலாக அமைச்சரவை அமைத்த போது செய்ததைவிட மாறுபட்டவை அல்ல; ராஜாஜி அவர்கள் தமது ஆடைகளைத் தானே துவைத்துக்கொள்வது போன்ற புகைப்படங்களை நாட்டுப் பத்திரிகைகளும் இதழ்களும் பெரிதாக விளம்பரப் படுத்திக்கொள்ளவில்லையா?

கழக அரசு, முதன் முதலாக படி அரிசித் திட்டத்தை அறிவித்த போது, அத்திட்டத்தின் மூலம், கழகம் ஒரு பெருந்தவறு செய்து விட்டதாகக் காங்கிரஸ்காரர்கள் நம்பினார்கள்! திட்டப்படி அரிசி கிடைக்கப்பெறாத பிற பகுதி மக்கள் திட்டத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுவார்கள் என்று அவர்கள் நம்பினர். இதன்மூலம் புற நகர்ப் பகுதிகளில் அரிசி விலை உயரும் என்றும் எதிர்பார்த்தனர், பாவம்!

அரசின் திட்டத்திற்கு எதிராக எந்தக் கிளர்ச்சியும் மக்களால் தொடங்கப்படவில்லை. மக்களிடம் போதிய அரிசி கையிருப்பு இருந்தது அல்லது தட்டின்றி அரிசி கிடைத்தது! அதனாலேயே எந்தக் கிளர்ச்சியும் ஏற்படாமல் போயிற்று.

அண்மையில் சென்னை நகரத்தில் ஏற்பட்ட தீவிபத்து நிகழ்ச்சிகள் கூட, கழகம் மக்களது மன எழுச்சியையும், ஒருமித்த ஆதரவையும் திரட்டிக்கொள்ளும் ஒரு வாய்ப்பாகப் போயிற்று!

வீட்டுக்கு வீடு சென்று மக்களைச் சந்திக்கவும், நிதி சேகரிக்கவும் நல் வாய்ப்பாயிற்று இது. திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் உள்ளிட்ட எல்லா தலைவர்களுமே மக்களை அணுகினார்கள்.

திரு. ராமச்சந்திரன் மட்டும் ஒரு நாளில் 50 ஆயிரத்திற்கும் மேலாக ரொக்கமாகவும் பொருளாகவும் திரட்டினார்!

மூட்டை மூட்டையாக சில்லரை நாணயங்கள் வசூலான முறையிலிருந்து கழகம் பல்லாயிரக்கணக்கான மக்களது இதயத்தில் குடிபுகுந்திருக்கிறது என்றே கூறிவிட முடியும்!

தமிழகத் தொழில்துறை வளர்ச்சிக்கு சேலம் உருக்காலைத் திட்டமும் தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும் எத்தனை அத்தியாவசியமானது என்று உணர்ந்து, கடந்த 20 ஆண்டுகளாகவே காங்கிரஸ் ஆட்சியினரிடம் தமிழக மக்கள் கோரிக்கை விடுத்து வந்துள்ளனர். அலட்சியப் படுத்தப்பட்டதன் காரணமாகவே ஜூலை 23-ல் ‘எழுச்சி நாள்’ கொண்டாடியது கழகம். தமிழகம் முழுதும் எந்தவித அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழாமல் எழுச்சி நாள் நடத்த கழகத்தால் எப்படி முடிந்தது?

மக்கள் ஆதரவு அதற்கிருக்கிறது-மக்கள் கருத்தறிந்து மனோபாவமறிந்து அது செயல்படுகிறது அவ்வளவுதான்!

—K. S. ராமானுஜம்

(ஹிம்மத் இதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்)

துணிவுகொள்'

நெருக்கடி அதிகமாக இருக்கிறதா? வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை சொற்பமாகஇருக்கிறதா? அப்படியானால், எவ்வளவுக் கெவ்வளவு துணிச்சலாய் நீங்கள் நடந்து கொள்கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு ஆபத்து குறைவு.

—லிவி.

*

மகிழ்ச்சி

நாம் இரகசியமாகச் செய்த ஒரு நல்ல காரியத்தைப் பிறர் தற்செயலாகக் கண்டுபிடித்து விடும்போது நமக்கு ஏற்படுகிறதே மகிழ்ச்சி, அதுதான் மகிழ்ச்சியுள் பெரு மகிழ்ச்சி!

—லாம்.

2.10.67. ப. 5

அவளா தெய்வம்?

"பெண்கள் அனைவராலுமே காதலுக்கு இலக்கணம் வகுக்க முடியாது; அது......ஒரு சிலரால் மட்டுமே முடியும்."

அவள்தான் தெய்வம் அப்போது அவனுக்கு; அவள்தான் பேச்சு, மூச்சு, உடல், உயிர், அத்தனையும்.

நளினப் பொன்மேனி—நிலவைப் பறிக்கும் முகம் — நீந்தியோடும் மீனுடன் போட்டி போடும் விழிகள்—ரோஜா நிற உதடுகள் — அவை சிந்தும் தேனினும் இனிய தெள்ளமுதான தீந்தமிழ் மொழி. அத்தனைக்கும் சொந்தக்காரியான அவள், அன்று அவனின் ஏகபோக உரிமையான சொத்து.

மாற்றுக் குறையாத தங்கமே! மயிலன்ன சாயலைப் பெற்றவளே! தீந்தமிழ்த் தென்றலே! திகட்டாத கற்கண்டு மொழியாளே! கனிரசமே! கரும்பே! தேனே! மானே நான் கேட்கின்ற இன்பத்தை இல்லை என்னாது வாரிவழங்கும் வள்ளலே! உன் பொன்னுனவாய் திறந்து சொல்லாத கவிதைகளைச் சொல்லும் சொர்ண பிம்பமே! கற்பகத் தருவே! நீ இல்லாத உலகம் எனக்கு நிலவில்லாத உலகம் போலாகும் என்றெல்லாம் அன்று பேசியதையெல்லாம் இன்று நினைத்தும் பார்க்கும்போது, சே......என்ன பைத்தியக்காரத்தனம் செய்துவிட்டோம் என்று உணர்த்துகிறது அவன் மனம்.

அன்று அவள் அவனின் கனவுக் கன்னி. இன்றோ அவளை நினைத்தாலே நெஞ்சம் நெருப்பாகிறது என்கிறான். அவள் அணைப்பிலே கண்ட சுகமனைத்தையும் மரண அவஸ்தை என்று கூறுகிறான், நீதான் என் இருண்ட வாழ்வின் ஒளி விளக்கென்பான் அன்று. இன்றோ அவள் என் வாழ்வைப் பொசுக்க வந்த கொள்ளிக் கட்டை என்கிறான். ஆண்டவனே! எல்லாமே கனவாகி விடக் கூடாதோ என நினைத்திடுவான் ஒருகணம். மறுகணம் ஐயோ வேண்டவே வேண்டாம். அப்படியொரு பயங்கரக் கனவைக்கூட நான் கண்டிருக்க வேண்டியதில்லை என்கிறான்—அப்படி அவள் அன்று அவனுக்குக் குழைத்துக் கொடுத்த தேன்தான் என்ன? இல்லை...... இன்று அவள் ஈட்டிக் கொடுக்கும் இழிவுதான் என்ன?—

கஸ்தூரி நடராசன்

ஆம், ரெஜினா. அதுதான் அன்று அவனின் உள்ளம் கவர்ந்த சிங்காரப் பெட்டகத்தின் பெயர். ராஜன் திருச்சியில் உள்ள முத்தையா நூற்பு ஆலையொன்றில் பணிபுரிந்து வந்தான். ரெஜினாவோ ராஜனுக்குப் பின்பு அந்த கம்பெனியில் வேலைக்கமர்ந்தவள்.

ராஜன் மிகவும்நல்லவன். உயர்ந்த எண்ணங்களால் தன் நடையுடை பாவனைகளை வளர்த்து வந்தவன். மற்றவர் மனம் வருந்தும்படி பேசவே மாட்டான் என்பது அந்த கம்பெனியில் ...லை செய்யும் அத்தனைப் பே...ரு முகமாக ஒப்புக் கொள்...மை.

...க் கம்பெனியில் ... வந்தாள் என்பது தான் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்......ராஜனின் உள்ளத்திலும்......குடியேறுவாள் என்பது..... முடியாதது அல்ல, யாரும் எதிர்பார்க்காத செயல் விஷயம். ஏன் ராஜனுக்கே அது விடுவிக்க முடியாத புதிர்தான்.

ராஜனின் மென்மையான போக்கும் உண்மையான நடத்தையும் அவளின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கவேண்டும். இல்லையேல் அவள் அவனிடம் தனக்கு ஒரு வீடு வாடகைக்கு வேண்டும், கொஞ்சம் சிரமம் பார்க்காமல் பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கமாட்டாள். பாவம் வெள்ளை உள்ளம் படைத்த அவனறியான் அதன் உட்பொருளை. அவனும் அவளின் விருப்பப்படியே தன் வீட்டுக்கருகாமையிலேயே நல்லதொரு வீட்டை அமர்த்திக் கொடுத்தான்.

ராஜனின் அடுத்த வீட்டில் இடம் பிடித்தஅவளுக்கு, அவனின் உள்ளத்திலும் இடம் பிடிக்க வேண்டும் என்ற உணர்வு தலை தூக்கியது. காரணம், அவளுக்கே...விளங்காத ஒன்று. ஒரு கணம் ராஜனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றும். மறுகணம் ஏன் அவரைப் பார்க்கவேண்டும் என்ற கேள்வி எழும். அதற்கு அவள் மனம் பதில் தர மறுக்கும். மொத்தத்தில் ராஜனை அவள் நெஞ்சம் நினைத்தபோதெல்லாம் பார்ப்பதிலே ஒரு நிம்மதி அடையும். அவ்வளவுதான் அவளால் சொல்லமுடியும்,

நாட்கள் ஓட ஓட அவர்கள் பழக்கம் கூடிக் கூடி வந்தது. கூடி வள

ரும் பழக்கம் குறை கற்பித்துவிடக்கூடாதே என்ற எண்ணத்தால், ராஜன் தன் சொல்லையும் செயலையும் நேர்மையிலிருந்து துளியேனும் விலகாமல் தன் தூய்மையை மேலும் துல்லியமாக்கிக் கொண்டான். ராஜனின் நேர்மையான போக்கு ரெஜினவை சற்று நிதானிக்கச் செய்தது. கடும் புயல் வந்திடினும் கலம் கரை சேர்ந்திட வேண்டுமல்லவா? அந்த நிலைதான் ரெஜினவுக்கு. ராஜன் என்னதான் தன்னை அவளின் பிடியிலிருந்து ஒவ்வொரு செயலிலும் தன்னை பிரித்துக் காட்டினலும், அவனையடையவேண்டும் என்ற ஆசையாத நம்பிக்கை இதயத்திலே கொண்டாள்.

ராஜனே ரெஜினவைப் பற்றி எந்தவித முடிவுக்கும் வர முடியாதவனகிவிட்டான். அவனுக்கும் அவள் மீது எண்ணம்தான். இருந்தாலும்......தன் எண்ணம் பழக்கத்திற்குக் குறை கற்பித்தூவிடக்கூடாது என்பதுதான். ஆகவேதான் தன் மனதின் அடித்தளத்தில் புதைந்து கிடந்த எண்ணத்தை அவ்வளவு விரைவில் வெளிப்படுத்த முன் வரவில்லை என்பதைவிட தன் எண்ணங்களுக்குக் கல்லறை கட்டிவிட்டான் என்பதுதான் பொருந்தும்.

இந்நிலையில்தான் ராஜனின் தாய் அவன் திருமண சம்பந்தமாக நல்ல முடிவை நாடி திருச்சிக்கு வந்தார்கள். உற்ற நேரத்தில் பிள்ளையிடம் கனிவோடு தனக்கு மருமகள் வர வேண்டும் என்ற ஆசையை வெளியிட்டார்கள். ராஜனே நிலைதடுமாறினன். தனக்குத் திருமணம் இந்நிலையிலா? அவன் மனம் அவனைக் கேட்டது. ஏன்? ரெஜனவைத் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லிவிட்டால்? அவன் மனம் அவனுக்கு உணர்த்தியது. அதெப்படி? ஒரு வேளை இவள் நம்மை இந்த உறவுக்கு இணைத்துக் கொள்ள விரும்பாவிட்டால் என்ன செய்வது? இவ்வளவு தூரம் நம்மிடம் பழகும் அவளுக்கு நம் மீது எண்ணயில்லாமலா இருக்கும்? மறுகணம் அவன் மனம் இப்படி உணர்த்தியது. ரெஜினவை இதைப் பற்றி எப்படிக் கேட்பது? அவள் யோசித்தாள் நாசுக்காக கேட்டுப்பார்ப்போம். அவள்முடிவை தெரிந்து பின்பு அம்மாவுக்கு நம் முடிவைச் சொல்வோம் என நினைத்து எதிரேயிருந்த தாயிடம் இதைப்பற்றிய முடிவை அத்த நாள் சொல்வதாகச் சொல்லிப் புறப்பட்டான்.

தேடிப் போன ரெஜின வீட்டிலேயே இருந்ததைக் கண்டபோது உண்மையிலேயே அவனுக்குப் பெரும் மகிழ்ச்சிதான். ரெஜின, ராஜனின் திடீர் வருகைக்கு மிக்க மகிழ்ந்தாள்.

எனக்குத் திருமணம் செய்யப் போகிருர்களாம். அம்மா அதைப் பற்றித்தான் செல்லிவிட்டுப் போக வந்தேன் ரெஜின. அவன் அதை அவளிடம் எப்படியோ சொல்லிவிட்டான்.

''அப்படியா'' அவள் உண்மையிலேயே தன் நிலையை இழந்துவிட்டாள். மேற்கொண்டு அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. அவன் சொன்ன விஷயம், விஷம் போல ஒவ்வொரு விஞடியும் அவள் இதயத்தைச் சுட்டெரித்துக்கொண்டேயிருந்தது.

'ஏன் ரெஜின?' அவள் ஏதாவது சொல்வாள் என்று எதிர்பார்த்தான்.

'ஒன்றுமில்லை, நீங்கள் என்ன சொன்னீர்கள்' தன்னை சமாதானப்படுத்திக்கொண்டு கேட்டாள் ரெஜின.

'முடிவை நானே சொல்வதாகச் சொல்லிவிட்டேன்'

'ஏன்?' அவள் சந்தேகத்திற்கிடையே கேட்டாள்.

'எதிலும் அவசரம் கூடாதல்லவா!' அவன் நிலைமையைக் குழப்பினன்,

'இப்போது முடிவெடுத்து விட்டீர்கள் அல்லவா?' அவள் துணிந்து கேட்டுவிட்டாள்.

'முடிவைத் தேடித்தான்......அவனல் வார்த்தைகளை முடிக்க முடியவில்லை.

'எது நல்ல முடிவென்று உங்களுக்குப் படுகிறதோ அதே முடிவை நீங்கள் உங்கள் அம்மாவிடம் தெரிவித்துவிடுங்கள், அதுதான் முறை' இதை சொல்லி முடித்தவுடன் ஓ...வென்று அழுதுவிடலாம் போல் தோன்றியது அவளுக்கு.

'வேறு என்ன செய்வது ரெஜின?' புதுவிதமான கேள்வி கேட்பது போன்ற உணர்வு அவனுக்கு.

'செய்வதற்கு என்ன இருக்கிறது', உங்கள் முடிவு எதுவோ அதுதான் உங்கள் எதிர்காலம்,' அவளும் நிதானித்துதான் பதில் சொன்னள்.

பதிலேதும் கூருமல் அங்கிருந்து புறப்பட்டவன் வீட்டில் அன்று இரவு முழுவதும் உறங்கவேயில்லை. அவள் நம்மீது எண்ணம் கொண்டிருந்தால் நிச்சயமாக வெளியிட்டிருப்பாள். திருமண உறவை நம்முடன் அவள் விரும்பவில்லை. எனவேதான் உங்களுக்கு எது நல்ல முடிவு என்று படுகிறதோ அதையே உங்க அம்மாவிடம் சொல்லிவிடுங்கள். அதுதான் உங்கள் எதிர்காலம் என்ருள்' வீணக ஏன் அவள் மனதைக்கெடுப்பானேன். மேலும் அவள் பழக்கம் நீடிக்கட்டும். அதுவே போதும். அவளுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என நினைத்து மறுநாள் தன் அம்மாவிடம் உங்களுக்குப் பிடித்தமான பெண்ணை மருமகளாக்கிக் கொள்ளும்படி சொல்லிவிட்டான். பிள்ளையின் ஒப்புதலைக் கேட்டு அவன் தாய் மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பிவிடுகிருர்கள்.

நாட்கள் இரண்டு ஓடவில்லை. நகர ஆரம்பித்தது, ரெஜினவைப் பொறுத்தவரை எந்தெந்த விதத்திலோ தன் நெஞ்சத்திற்கு அமைதி தேட முயன்ருள். முடியாத நிலை பெற்றவுடனே அன்று மாலை 3-மணிக்கு மலைக் கோட்டையில்

விரைவில்' புதிய தொடர்கதை!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

‘கண்ணுத்தாள்’

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில் [illegible]ட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்[illegible] கண்ணீர்ப் பட்டயம்.

தன்னை சந்திக்கும்படி அழைப்பு விடுத்தாள். அ அழைப்பு அவன் எதிர்பார்க்கா ஒன்ருக இருந்தாலும், வியப்பு கலக்கமும் கலந்த சந்திப்பாகவே இருக்கும் என யூகம் செய்தான். சரியாக இரண்டு மணிக்கெல்லாம் மலைக் கோட்டைக்குப் போய்விட்டான். ரெஜிஞவோ குறிப்பிட்டபடி சரியாக மூன்று மணிக்கு வந்துவிட்டாள்.

ரெஜிஞ வந்ததும். தன்னிடம் எதையோ சொல்வாள் என நினைத்தான். அவன் நினைத்தபடி நடக்காதது மட்டுமல்லாமல் நினைத்ததற்கு நேர்மாருக நடந்துவிட்டது. அவள் இதயம் எத்தனைப் பெரிய எரிமலையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்று அவள் வந்ததும் வராததுமாக ஓ...வென்று அழ ஆரம்பித்ததிலிருந்து தெரிந்து கொண்டான். அவன் அவளுக்கு ஆறுதல் சொன்ஞன். எவ்வளவோ சொல்லியும் அவள் அழுகையை நிறுத்தவில்லை. கடைசி சொட்டு கண்ணீர் வற்றுகின்றவரை அழுது தீர்த்தாள். அழுது முடித்தவுடன் எதிரில் அமைதியாக அமர்ந்திருந்த ராஜனிடம்.

'நீங்கள்...நீங்கள் என்னை மட்டும் ஏமாற்றவில்லை. என் உணர்ச்சிக்கே கல்லறை கட்டிவிட்டீர்கள்' என்ருள்.

'நாஞ, என்ன செய்தேன்?...... நான்?' அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

'இத்தனை நாள் என்னுடன் பழகியும் உங்களால் என்னைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை?' அவள் நிறுத்திஞள். அப்போது, எல்லாம் புரிந்துவிட்டது அவனுக்கு.

'நான் அதற்காகத்தானே ரெஜிஞ அன்று, உன்னிடம் கேட்டேன்' அவன் தப்பித்துக் கொள்வதைப் போல் பேசிஞன்.

'என்ன கேட்டீர்கள்? எனக்குத் திருமணம் நிச்சயிக்கப் போகிருர்கள், அதைப் பற்றித்தான் சொல்ல வந்தேன், என்று நீங்கள் உங்கள் திருமண விஷயத்தை என்னிடம் சொன்னீர்களே யல்லாமல், என் அபிப்பிராயத்தைக் கேட்கவாவந்தீர்கள்.' அவள் அழுதுகொண்டே சொன்ஞள்.

'இல்லை ரெஜிஞ உண்மையிலேயே உன்னைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் அனுமதி பெற நான் நாகரீகமாக நடந்து கொண்டமுறை அது.'

'அது நாகரீகமா? உங்களுடன் பழகிய என்னுடன்கூட உங்களுக்கு அச்சமா?

ஏன், நீதான் உன் உள்ளக் கிடக்கையை என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா?'

அழுகையை நிறுத்திக்கொண்டு 'வேடிக்கையாக இருக்கிறது. எந்தப் பெண்ணும் ஒரு ஆணிடம் போய் தன் விருப்பத்தை வெளியிடமாட்டாள். அதை என்னிடம் நீங்கள் எதிர்பார்த்ததும் தப்புதான் என்னுடன் இத்தனை நாள் பழகி இருக்கின்றீர்கள். நீங்கள் சொல்லும் நாகரீகப்படி என்னிடம் உங்கள் எண்ணத்தை வெளியிட்டிருக்கலாம். நான் அதற்கு அனுமதியோ, மறுப்பையோ அன்று அளித்திருப்பேன்.' அவள் தன் மனதில் பட்டதை அப்படியே சொல்லிவிட்டாள்.

(10-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

அறிஞர் அண்ணு

அவர்களின்

கவின் படைப்புகள் பலவோடு.

கதை, கட்டுரை, கவிதைகள் மிளிர

முன்னணித் தலைவர்கள் பலரும்

எழுதும்

முத்துக் குவியலாய்,

முல்லைச் சோலையாய்

தயாராகிறது!

★

3-ம் ஆண்டு மலர்!

கடைசி முத்தம்

—துறவி—

[அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்பெயின் நாட்டில் வாழ்ந்து மடிந்த காதல் பறவைகளின் கண்ணீர் வரலாறு]

தன்இயல்பு மாறாத உகரம் வந்து
துணையாகும் உயிர்எழுத்தால் மயங்கு தல்போல்
பொன்வண்ண இசபெல்லா, தீக்கோ பார்வைப்
பட்டதினால் மனம்மயங்கிப் போனாள்; நெஞ்சில்
அன்றுமுதல் அனுராகக் கனவுப் பூக்கள்
அழகாக மடலவிழ்க்க ரசித்து வந்தாள்
முன்னிருந்த நிலைமாறித் தீக்கோ வும்தன்
மனத்திரையில் அவள்வடிவை எழுதி வந்தான்!

தொட்டியிலே இருக்கின்ற தண்ணீர் சற்றுத்
தளும்பிடினும் பின்அமைதி யாகும், ஆனால்
சுட்டெரிக்கும் வெங்கதிரால் வற்றி டாத
சமுத்திரமா சலனமின்றி அடங்கிப் போகும்?
ஒட்டிவிட்டால் இரண்டுமனம் காத லாலே
ஓடியாது பிரியாது எதுவந் தாலும்
வெட்டிவைத்த குழியுள்ளே புதைந்திட் டாலும்
விளையத்தா னேசெய்யும் சத்து வித்து?

என்றுஎண்ண முன்னேற்ற மாற்றம் கொண்ட
இசபெல்லா வின்தந்தை, நெஞ்சம் மாற்றி
ஒன்றுபட்ட அவ்விருவர் காத லுக்கு
ஒப்புதலை தந்துவக்கி களித்துக் கொண்டார்
சன்னலிலே உள்ளதிரை விலகிக் கொண்டால்
சற்றேனும் தடையின்றிப் பழகு கின்ற
தென்றலைப்போல் தீக்கோவும் இசபெல் லாவும்
தனிமையிலே மனஒருமை கண்டு வந்தார்.

பாதிரியார் வேதஉரை நிகழ்த்தக் கூடிப்
பார்ப்பதற்கு வந்திருப்போர் வாழ்த்திச் சொல்லச்
சீதநிலா இருட்டினிலே பழக வைக்கும்
சிற்றின்பத் திருமணத்தை முடிப்ப தற்கு
ஏதுமிலை தடையாக, என்ற போதும்
எதிர்பாரா மல்தீக்கோ தந்தை செத்த
வேதனையால் திருமணத்தை நிறுத்தி வைத்து
வளர்நினைவைச் சோகத்தில் நிறுத்தி வைத்தார்

தித்திப்பு முத்தத்தை விதைக்கும் இன்பத்
திருமணத்தை எதிர்பார்த்துத் தம்ம னத்தை
நித்தநித்தம் இங்கிதத்தில் நீந்த விட்டு
நெகிழ்ந்திருந்த தீக்கோவை, சண்டை யிட்டுக்
கத்திமுத்தம் கொடுப்பதற்கு அரசாங் கத்தின்
கட்டளையோ அனுப்பியது களத்தை நோக்கி
உத்திரவைத் தீக்கோவும் பெற்றுக் கொண்டு
ஓடிவந்தான் இசபெல்லா வின்வீட் டிற்கு

மீன்சாயல் காட்டுகின்ற விழியில் கண்ணீர்
மழைவடித்து மனம்வெடித்து அதிர்ச்சி யுற்று
வான்விளக்கு நிலாச்சாயல் காட்டு கின்ற
வடிவழகு முகம்இருண்டு போக, காதல்
தேன்குடிக்க ஒருகாலம், பிரிவு என்ற
தேன்கொட்டித் துடிக்கஒரு காலம், இன்பம்
தான்சுவைக்க இனிஏது நல்ல காலம்?
நீலவிழித் தண்ணீரால் நனைந்த வாறு

தீக்கோவின் கரம்பற்றி விம்மி விம்மித்
தீச்சூழப் பதைப்பதைப்போல் மனம்து டித்து
நோக்காடு தணியாத உணர்வி னோடு
வேதனையில் இசபெல்லா அரற்றி நின்றாள்
பூக்காடு போன்றவளே! செத்து வீழும்
பிணக்காடு சுடுகாடு பாடி வீடு
நோக்கிஅதை வாள்சுமந்து தோள்வி ரிந்து
நடந்தாலும் பாதங்கள், நெஞ்சம் மட்டும்

உன்னிடத்தில் சிறைஇருக்கும், கண்கள் என்றும்
உனைஅங்கும் தரிசிக்கும்! பிரிவு நேர்ந்தால்
முன்னைவிட நம்அன்போ உறுதி பாகும்
மனம்மிகவும் நெருக்கமுற்றுக் கலந்து போகும்
ஒன்றுமட்டும் கூறுகின்றேன் மரணம் கூட
ஒருநாளும் நிரந்தரமாய்ப் பிரித்திடாது
என்றபடி தீக்கோவும் அழுத வாறு
இசபெல்லா வின்விழியைத் துடைத்து விட்டான்

திரும்பிவரும் வரைக்கும்நான் காத்தி ருப்பேன்
திருமணத்துக் கனவுகளைத் தொகுத்த வாறு
விருப்பமென்று ஏதுமில்லை நீங்கள் மீண்டும்
வரும்வரைக்கும் தனிவாழ்வில் எனக்கு! நெஞ்சை
இரும்பைப்போல் வைத்திருப்பேன், காலம் தாழ்த்தால்
இற்றுவிடும் துருப்பிடித்து இரும்பும் கூட
பிரிவிஃதும் மிகநீண்டு விட்டால் என்றன்
பேதைமன மும்முறிந்து தானே போகும்?

இவ்வாறு சோகமொழி உதிர்த்த வாறு
இசபெல்லா விடைதந்தாள் தீக்கோ விற்கு
எவ்வாறோ மனம்தேறி அவனும் சென்றான்
இரத்தத்தால் நனைகின்ற களத்தை நோக்கி
வெவ்வேறு பாத்திரங்கள் மாறி மாறி
வருகின்ற நாடகத்து வாழ்வில் தோன்றி
அவ்வப்போ தெவைஎவையோ நிகழும் போகும்
அதைப்போன்று ஆனதுவே அவர்கள் வாழ்க்கை

மதுமுத்தக் கோலமிட்டுக் கன்னம் மீது
மயல்கவிதை கற்றுதந்த தீக்கோ, கத்தி
புதுமுத்தம் இட்டதினால் செத்துப் போனான்
பிணமாகி உயிர்மூச்சு சரித்தி ரத்தை
இதன்பிறகும் நீட்டாமல் சுருக்கிக் கொண்டான்
என்றஇழ வுச்செய்தி கேட்டு நெஞ்சம்
அதிர்ந்துவிட்டாள் இசபெல்லா, பற்றி மூண்ட
அழற்சோகக் கொடுந்தீயில் கருகிப் போனாள்.

பலநாட்கள் கழிந்தோட, கண்ணீர் ஆற்றில்
பழகுகின்ற விழிஇரண்டைத் தடுப்ப தற்கும்
அலைக்கழித்து துயர்பயணம் செய்யும் நெஞ்சை
அமைதியிலே நிறுத்துதற்கும் இயன்றி டாமல்
நிலைமாறி உருமாறி வாழ்க்கை தன்னை
நீந்தவிட்டாள் இசபெல்லா சோகத் தீயில்
விலைமதிப்பு இல்லாத பொற்ச ரட்டில்
விளங்கிவந்த மணிஉதிர்ந்த தைப்போல் ஆனாள்!

வேறுஒரு மணிஎடுத்துப் பொற்ச ரட்டில்
விளக்கமுறப் பதிப்பதைப்போல் அவளின் தந்தை
ஆறுதலை அவளுக்குச் சொன்ன தோடு
ஆனந்தத் திருமணத்தை முடிப்ப தற்கு
வேறுஒரு மணமகனை நிச்ச யித்தார்
வேதனைதான் என்றாலும் இசைந்தாள், வாழ்வே
மீறிவரும் நிகழ்ச்சிகளின் தொகுப்புத் தானே
மனிதமனச் சக்திஎன்ன செய்யக் கூடும்?

சுடுகின்ற நெருப்புவட்ட கதிரோன், தோன்றிச்
சந்திக்கும் பொழுதுபுலந் திட்டால், மாலை
இடுகின்றகல்யாணம், மாதா கோவில்
இணைத்துவைக்கும் ஒப்பந்த வாழ்க்கை நீண்டு
தொடர்வதற்குத் துவங்குகின்ற திருநாள், ஆணின்
துணையாலே இயங்குகின்ற மணநாள், ஆனால்
ஒடிந்தமனம் கசிந்துருக இசபெல் லாவோ
ஓயாமல் விழிநனைய அமர்ந்தி ருந்தாள்

ஆச்சரிய மாய்அவளின் முன்னே தீக்கோ
ஆறிவிட்ட புண்களொடு எதிரே நின்றான்
பேச்சற்றுப் போய்விட்டாள், என்ன வென்று
புரியாமல் இசபெல்லா சிலையாய் ஆனாள்
தீச்சுட்டைப் போல்மனத்தில் எரிக்கும் காதல்
தணல்தன்னைத் தணிப்பதற்குத் தீக்கோ தாவிப்
பூச்சரத்தைப் போல்மிளிரும் அவள்க ரத்தைப்
பற்றுதற்குப் பாய்ந்துசென்றான் சிரித்த வாறே

பாய்ந்துவந்தால் கூர்அம்பு விலகு தல்போல்
பயத்தாலே எழில்மங்கை ஒதுங்கிக் கொண்டாள்
வாய்முத்தம் தேடிவந்த தீக்கோ, அந்த
வாய்ப்புதனை அடையாமல் கலங்கிப் போனான்
மாய்ந்துவிட்ட தாய்ச்சொன்ன நீங்கள் இங்கு
மறுபடியும் எவ்வாறு வந்தீர் தீக்கோ?
நோப்பட்ட இசபெல்லா கதறிக் கண்ணீர்
நிரம்பவிட்டுத் துணைவிழியில், சத்த மிட்டாள்

அடிபட்டுப் புண்ணுற்றுச் சிகிச்சைக் காக
அனுமதிக்கப் பட்டேன்நான் கொஞ்ச காலம்
முடியவில்லை எழுதுதற்கும் கடிதம், நானோ
மரணமுற்ற தாய்எவரோ சொன்னார் போலும்
வெடிச்சிரிப்புத் தான்தோன்றும் இதைநி னைத்தால்
வேதனைஏன் இனிநமக்கு விலக்கித் தள்ளு
விடிகின்ற வரைமகிழ்வோம் பிரிந்தி ருந்த
வருத்தத்தை அதனாலே அழித்து வைப்போம்

என்றிட்டான் குதுகலமாய்த் தீக்கோ, ஆனால்
இருவிழியால் நீர்க்கோலம் வரைந்த வாறு
முன்னின்ற இசபெல்லா அழுகை விம்ம
மறந்துவிடு வீர்என்னை இனிமேல் இந்தச்
சின்னஇடை உமதணைப்பில் துவண்டி டாது
சுகமுத்தம் என்இதழ்கள் அளித்தி டாது
இன்னொருவ ரின்மனைவி இனிநான், இந்த
இரவிற்குச் சாவளித்து ஒளிபு லர்ந்தால்!

உரைகேட்ட தீக்கோதன் உள்ளம் தாளாப்
உடைபட்டுச் சிதறிவிடக் கலங்கிப் போனான்
எரிகுண்டு மார்பிளக்க வெங்க ளத்தில்
இறந்திருந்தால் மகிழ்ந்திருப்பேன் துன்பவாழ்க்கைச்
சரித்திரத்தை எழுதுதற்காத் திரும்பி வந்தேன்
சமுத்திரத்தின் மணல்வீடோ இனிஎன் வாழ்வும்
பெருகிவரும் கண்ணீரால் இரங்கற் பாடல்
பாடிவைத்தான் செத்துவிட்ட காத லுக்கு

'ஒருமுத்தம் இறுதிமுத்தம் எனைஅ ணைத்து
ஒருமுறைநீ தந்துவிட்டால் எஞ்சி யுள்ள
இருள்வாழ்வை நான்கழித்து விடுவேன்' என்று
இசபெல்லா விடம்இறைஞ்சி நின்றான் தீக்கோ
'திருட்டுமுத்தம் கலங்கமுத்தம் தருவ தற்குத்
துளியும்நான் விரும்பவில்லை இங்கி ருந்து
விரைவாகப் போய்விடுங்கள்' என்ற வாறு
விம்மிநின்றாள் இசபெல்லா அவனைப் பார்த்து

ஏமாற்ற நெஞ்சமொடு, மேல்இ ருந்து
எடுத்தெறிந்த கண்ணாடி போல்உ ணர்வு
ஊமைஇடர் பட்டழிய இறுதி யாக
உற்றுஉற்றுப் பார்த்துவிட்டு அவளை நின்ற
பூமியிலே தன்அடியைத் திருப்பி வைத்தான்
புலன்சோர்ந்து சோகத்தால் வீழ்ந்தான், காலைத்
தாமரைப்போல் நின்றிருந்த இசபெல் லாதன்
தழல்துயரை மறந்துவிட்டு ஓடி வந்து

தூக்கிமடி மேல்அவனைக் கிடத்தி வைத்துத்
'தீக்கோ'என் றன்பொழுக அழைத்தாள், ஆனால்
சாக்காட்டுத் துயில்கொண்ட அவனோ அந்தச்
சப்தத்தின் இனிமையிலே விழிப்பா கொள்வான்?
கூக்குரலில் இசபெல்லா, அழுதாள் சாவுக்
குழிப்பயணம் தொடர்வதற்கா இங்கு வந்தீர்
நீக்காமல் நமதன்பை, மரண முற்றும்
நீயின்றோ காதலுக்குத் தெய்வ மானாய்!

வரிக்கண்ணீர் மழைப்பெருக இதனைச் சொல்லி
வீழ்ந்தழுது இசபெல்லா புரண்டாள், துன்பத்
திருமணத்தை நிறுத்திவைத்து ஒதுக்கி விட்டுத்
தீக்கோவின் பிணஊர்வ லத்தில் தானும்
ஒருத்தியெனக் கலந்துசென்றாள், காலம் செய்யும்
ஒத்திகையின் விசித்திரம்தான் என்னே! நால்வர்
தரைமீது சவப்பெட்டி இறக்கி வைத்தார்
துவண்டபடி இசபெல்லா அருகே வந்தாள்

"நெடுங்காலம் வாழ்ந்தி ருப்பாய், நேற்று
நீகேட்ட முத்தத்தைத் தந்தி ருந்தால்
படுபாவி மறுத்துவிட்டேன், உன்னை இந்த
பிணக்கோல உருவத்தில் தள்ளி விட்டேன்
கொடுக்கின்றேன் நீகேட்ட முத்தம்" என்று
குனிந்தபடி இசபெல்லா அவன்உ தட்டில்
பதியவிட்டாள் தன்உதட்டை, பிறகு அந்தப்
பொற்சிலையும் பிணமாகிச் சாய்ந்து போனாள்!

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஒருவேளை நான் சொல்வது உனக்குப்பிடிக்காவிட்டால் என்மீது வெறுப்புக்கொண்டு என்னுடன்பழகுவதை நீ நிறுத்திக் கொண்டால் என்ன செய்வது என்ற எண்ணத்தில்தான் நான் அமைதியாகஇருந்துவிட்டேன். இப்போது என்ன செய்வது?' 'வேண்டாத்தகாத பயத்தின் அடிப்படையில் விபரீதத்தை விலைகொடுத்து வாங்கிவிட்டீர்கள்' அவள் அலுத்துக்கொண்டாள்.

'நானா?' அவன் ஆர்வமுடன் கேட்டான்.

'நிச்சயமாக நீங்கள்தான், இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்.'

'செய்வதற்கு என்ன இருக்கிறது, எல்லாம் முடிந்த கதை. தொடர்வது அவ்வளவு சுலபம் என்று எனக்குத் தோன்றவில்லை. என்று எழுந்தான் இருந்த இடத்தைவிட்டு. அப்போது இரவு 8 மணி இருக்கும். அவ்வளவு தான். எழுந்த அவனின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு தன் முகத்தில் பதித்துக்கொண்டு' என் தலைவிதி உங்கள் கையில்தான். என்னை வாழ வையுங்கள் அத்தான்' என்று மீண்டும் அழ ஆரம்பித்துவிட்டாள். பருவப் பெண்ணொருத்தின் மென் கரம் அவனைப் பற்றியது, அவனின் வாழ்நாளில் அதுதான் முதல்முறை. சிலுசிலுப்பான காற்றும் சிந்து பாடிவரும் சிற்ருரும், சிற்றிடையாளின் கைப்பற்றலும் அவன் இதயத்தை மாற்றியிருக்க வேண்டும். இல்லையேல் தன்னை மறந்து அவன் அவளுடன் அன்று இன்பம் துய்த்திருக்கவே மாட்டான். அவன் அவளின் அணைப்பிலே கண்டது சுகமில்லை. சொர்க்கம். பெண் உண்மையிலேயே ஆணுக்கு ஒரு அபூர்வக் கலவைதான். அவன் அன்று அவளிடம் அடைந்த சுகம், ஏற்படுத்திக் கொண்ட உறவு எல்லாமே புதுமை ...புதுமை.

அவன் அன்றிலிருந்து அவளின் கைப்பதுமை. கண்டுவிட்ட இனிமையைத் தொடர்வதிலே அவள் காட்டிய அக்கறைதான் எத்தனை. இன்பம் அது அவனுக்கு. அது பெருங்கடலாக அல்லவா தோன்றுகிறது. அதன் எதிரொலிதானே என்னவோ, தன் திருமண ஏற்பாட்டை இன்னும் இரண்டு மாதத்திற்கு ஒத்திவைக்கும்படி அவசரக் கடிதம் எழுதிவிட்டான் தன் பெற்ரோருக்கு. இடைப்பட்ட இரண்டு மாதத்தில் கடந்துபோன ஒவ்வொரு நிமிடமும் அவன் வாழ்வில் நடந்த பொற்காலங்கள்.

நடந்துவந்த பொற்காலங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் ஒரு நாள் பாண்டியிலுள்ள தன் அண்ணனுக்கு உடல் நலம் சரி இல்லை, என்று பார்த்துவிட்டு வரப் போனவள் பதினைந்து நாள் நடந்தும் மீண்டும் திருச்சிக்கு வராமல் போகவே பெரும் துயரைத் தந்தது ராஜனுக்கு. தான் கண்டெடுத்த வைரத்தை கரைகாணாத கடலில் தொலைத்துவிட்டது போன்றதொரு பிரமை அவனுக்கு

அவள் வராவிட்டால் என்ன, நாம் செல்லலாமே பாண்டிக்கு அவளைத் தேடி என்று புறப்பட்டான். பாண்டியில் ரெஜினாவின் அண்ணன் இருப்பிடத்தைத் தெரிவிக்க நாசுக்காக மறுத்துவிட்டாள். யூகத்தின் அடிப்படையில், ஒருவேளை வேறெங்காவது போய்விட்டாளோ என்று கோவைக்குப் போனான்! ஊட்டிக்குப் போனான்! இன்னும் இதுமாதிரி அவன் நினைவில் வந்த ஊர்களுக்கெல்லாம் போனான்! அவள் கிடைக்கவே இல்லை. ஏமாற்றமுடன் வந்து, தன் அறையைத் திறந்து பார்த்தவனது கண்களுக்கு விருந்தளித்துக் கொண்டிருந்தது அந்த திருமண அழைப்பு. யாருடைய திருமணம்? என்ற எண்ணத்தில் அந்த அழைப்பில் உள்ள எழுத்துக்களின்மீது தன் எண்ணங்களை ஓடவிட்ட போது, உண்மையிலேயே அவன் மரணத்தை சந்திப்பது போன்ற பிரமை. ஆம் ரெஜினாவுக்கும் சென்னையைச் சேர்ந்த தாமஸ் என்பவருக்கும் அன்றுதான் திருமணமாம்!

மிகச் சிரமப்பட்டு அவன் கண்டு பிடித்த விஷயம் இதுதான்!

அவனது அன்னைக்கு அவன் ரெஜினாவுடன் கொண்டிருந்த தொடர்பு எப்படியோ தெரிந்திருக்கிறது. அவளை அவனிடமிருந்து பிரித்துவிடும் 'சதி'யாகத்தான் 'தாமஸ்—ரெஜினா' திருமணம்!

இந்தக் குற்றத்துக்குத் தண்டனை பெறவேண்டியது யார்? நானா? என் அன்னையா? ரெஜினாவா? தாமசா? யார்? யார்?

அவன் மனம் கேட்டுக்கொண்டே இருந்தது. இரண்டாண்டுகள் வரையில் கேட்டுக்கொண்டிருந்தது,

அவளிடமிருந்து ஒரு கடிதம் அவனைத் தேடி வந்தது. அதில் அவளின் கணவன் தற்போது தன்னை விட்டுவிட்டு வேறு ஒரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்துவதாகவும். தான் இரண்டு வயதுக் குழந்தையைக்காப்பாற்றுவதற்காகப் பாண்டியிலுள்ள பள்ளியொன்றில் ஆசிரியைப் பணிபுரிந்து வருவதாகவும் எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்திற்கு அடுத்து அவன் பெற்ற செய்தி சே........ அவள் பெண்தானா? என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிட்டது! ஆம், அவள் இப்போது பாண்டியிலுள்ள இரவு விடுதியொன்றில் மானத்தை விற்றுப் பொருளைத் தேடுகிறாள். அதற்கு அவள் கற்பிப்பதாக கூறப்படும் காரணம், தாய் இறந்துவிட்டாள், தமையன் கார் விபத்தில் மாண்டான். கட்டிய கணவனே தன் இரண்டு வயது மகனுடன் தன்னை அனாதையாக விட்டுவிட்டான்! நான் பெண் எனக்கு ஏற்பட்ட அனுபவம் உலகத்தை நன்ருகப் புரிந்துகொள்ள முடிகிறது. பெண்ணாகப் பிறவி எடுத்த நான் அனுபவிக்கும் தொல்லையை என் மகள் அனுபவிக்கக்கூடாது. ஒன்றின் அழிவில்தானே மற்ரென்றின் ஆக்கம். அவள் வாழ்க்கைச் சீர் பெறத் தேவையானது பணம். அப்பணம் இரவு விடுதியில் நிறைய கிடைக்கிறது. நான் கெட்டாலும், சகிப்பேன் என் மகள் நன்ருக வாழவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் இந்த முடிவு. இது தான் அவள் அளிக்கும் பதிலாம்!

ராஜனுக்கு அன்று ரெஜினாதான் தெய்வம். ராஜனைப் பார்த்துப் பழகும் அத்தனை 'நண்பர்களும் என்னடா? அவள் அழகில் சொக்கிவிட்டாயே, எதற்கெடுத்தாலும் ரெஜினா ரெஜினா என்கிருயே' அவள் என்னடா உன் தெய்வமா என்பார்கள். அன்றைய மனசாட்சி, ஆம்! அவள் அவனுக்கு தெய்வம்தான் என்று சொல்லும்.

'ஆனால் அதே நண்பர்கள் ரெஜினாவை இரவு விடுதியில் கண்டவர்கள் மட்டுமல்ல, அவளுடன் இன்ப இரவைக் கழித்தவர்கள் வந்து ராஜனிடம், "உன்தெய்வத்தை பாண்டி இரவு விடுதியில் கண்டேன், களித்தேன்" என்று சொல்லும்போது அவன் மனம் 'சே........அவளா தெய்வம்' என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது!

ஆனால், சொல்ல முடிவதில்லை. ஆனாலும் அது யார் குற்றம்? அத்தகைய அவளது வாழ்க்கைக்குக் காரணம் யார்? அவனா? அவளா? அவள் அன்னையா? ●

3—21
புலியுள்ளம்!

அண்ணனின் கண்கள் கலங்குவதைக் கண்டதும், செந்தாமரை அப்படியே சோர்ந்து உட்கார்ந்துவிட்டாள். அவள் எதற்காக வந்தாளோ — எந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள மதுரையைவிட்டுப் புறப்பட்டாளோ— அது முடியாது என்ற அவநம்பிக்கை, அந்தப் பாகு மொழியாளின் உள்ளத்தில் பளிச்சிட்டது.

உதிரும் கண்ணீர் முத்துக்களை விரல்களில் ஏந்திக்கொண்டு, உடன் பிறந்தவனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

'முள்ளை முள் கொண்டுதான் அண்ணா, எடுக்கவேண்டும்! குலசேகரனே வஞ்சகன் — கீழ் மகன்! நமது அப்பா அம்மா, அண்ணன்மார்களைப் பதைக்கப் பதைக்கக் கொன்று சாய்த்த சண்டாளன்! அவன் மீது இரக்கமோ, அவன் ஆட்சியைத் தலைமேல் ஏற்றுக் கொண்டிருக்கும் மக்களிடத்தில் இரக்கமோ கொள்ளக்கூடாது! வெட்டிச் சாய்க்கவேண்டும் — எல்லோரையும் கொன்று குவிக்கவேண்டும்! வீர மன்னர் ஒருவர் இரத்த வெள்ளத்தில் சாய்ந்ததைப் பார்த்து வாய்மூடிக் கிடந்தது எந்த மதுரையோ, அந்த மதுரையையே மயான பூமியாக்கிவிட வேண்டும்! ....பராக்கிரம பாண்டியரின் மகளும், வீரபாண்டியரின் தங்கையுமான நான் மாற்றுரை ஒழிப்பேன்—அதில் சிறிதும் மனந்தளரமாட்டேன்— இந்தச் சபதத்தை நிறைவேற்றுவேன் அண்ணா நிறைவேற்றுவேன்' என்று மதுரைக்கு வருவதற்குமுன்பு —நாடறிய நாட்டியக்காரியாக மாறுவதற்கு முன்பு — அன்னக்கிளியின் வீட்டில் முதன் முதலாகத் தன் அண்ணன் வீரபாண்டியனைப் பார்த்தபோது, எடுத்துக்கொண்ட சபதம், அவள்நினைவில் பசுமையாக இருந்தது.

'இந்த உலகில் தனி மனிதனாக இருக்கும் எனக்கு, ஒரு தங்கை இருக்கிறாள் என்ற எண்ணம் தோன்றினால் — அந்த எண்ணத்தினால்— என் தோள்களின் வலிமை இன்னும் அதிகமாகும்! தம்பி ஒருவன் இருக்கிறான் — நம்மைப்போல் அவனும் வாழவேண்டும் — என்ற பெருந்தன்மை என்னிடம் ஏற்பட்டுவிட்டது என்று கேள்விப்பட்டால், இந்தத் தூமகேது என்ன — அந்தச் சோழனே பயந்துதானே ஆகவேண்டும்!......' என்று அரண்மனையில் குலசேகரன் சொன்ன உணர்ச்சிமிகு சொற்கள், அவள் காதில் வந்து மணியோசை செய்தன.

செந்தாமரையின் மனம் குழம்பியது. உள்ளத்தில் புதைந்து கிடப்பதையெல்லாம், அண்ணனிடம் எப்படிக் கொட்டுவது என்று புரியாமலும்—கொட்டினால் அண்ணனின் வீர உள்ளம் குளிருமோ அன்றி கொதிக்குமோ என்று தெரிந்து கொள்ள முடியாமலும்—அந்த ஆடலழகி திணறினாள்.

செந்தாமரை!' என்றான் வீரபாண்டியன், தன் கண்களைத் துடைத்துக்கொண்டு.

'என்ன அண்ணா?' என்று கேட்பதைப்போல பார்த்தாளே அன்றி, வாய் திறந்து ஒரு வார்த்தையும் பகரவில்லை.

குலசேகரனே நமது குடும்பத்தையே புல் முளைக்கச்செய்த வஞ்சகன்! மதுரைக்குச் சொந்தக்காரர்களான நம்மை ஆண்டியாகவும் ஆட்டக்காரியாகவும் அலைந்து வாழும்படிச் செய்துவிட்ட சூதுக்காரன்! அந்த இரத்தவெறி பிடித்தவனின்மீது, உனக்கு எப்படி அம்மா இரக்கம் உண்டாகிறது?' என்று வீரபாண்டியன் கேட்டபடி, தங்கையின் எதிரில் உட்கார்ந்து, வாளைக் கீழே வைத்தான்.

குனிந்த தலையை நிமிர்த்தாமல் செந்தாமரை மௌனமாக இருந்தாள்.

'எதிரிகளின் முகாமில் பிளவை உண்டாக்கி, நாட்டிலே கொந்தளிப்பை உண்டாக்கி நான் படையெடுத்து வந்தால் வெற்றி சுலபத்தில் கிடைக்கும்படியான சூழ்நிலையை உண்டாக்கவே, மதுரைக்குச் செல்வதாகச் சொல்லிவிட்டுச் சென்றாய் அல்லவா?'

'ஆமாம்!'

'மாற்றாரை ஒழிப்பேன், அதில் சிறிதும் மனம் தளரமாட்டேன் என்று சபதம் வேறு செய்தாயே — நினைவிருக்கிறதா?'

'நினைவிருக்கிறது, அண்ணா—நன்றாக நினைவிருக்கிறது!'

'அப்படிப்பட்ட நீ, அந்தக் கயவனோடு சமாதானம் செய்துகொள்ளும்படி கூறும் அளவிற்கு எப்படி அம்மா மாறினாய்?'

'சூழ்நிலைக்குப் பெண்கள் பலியாவார்கள் என்று சொல்லக் கேட்டிருக்கிறீர்கள் அல்லவா?'

'வீரபாண்டியன் தங்கையுமா...'

'ஆமாம் அண்ணா நானும் பெண்தானே? வெள்ளத்தை எதிர்த்து நீந்தத்தான் பாடுபட்டேன்! பயனில்லாமல் போயிற்று! எதிர்நீச்சல் அடிக்க முடியாமல் வெள்ளத்தோடு வெள்ளமாக நான் கலந்துவிட்டேன் அண்ணா, கலந்துவிட்டேன்!' என்று தேம்பும் குரலில் அவள் கூறினாள்.

'உன் பேச்சே எனக்குப் புரியவில்லையே, செந்தாமரை?' என்று தங்கையின் முகத்தை உற்றுப் பார்த்தபடி வீரபாண்டியன் கேட்டான்.

'தூமகேதுவின் ஒற்றர் குழுவில் சேர்ந்து குலசேகரனுக்கு வேண்டிய ஒவ்வொருவரையும் துரோகிகள் என்று ஒற்றர்நாயகத்தினிடம் காட்டிக் கொடுத்து — தண்டனை அடையும்படிச் செய்து — எதிரியின் முகாமில் பிளவை உண்டாக்கப் போகிறேன் என்று கூறினேன் அல்லவா?'

'ஆமாம்!'

'அந்தத் திட்டத்தின்படி' படைத்தலைவர் ஆளவந்தாரின் மகனான சோலையப்பன்......'

'ஆமாம் சோலையப்பன்! நான் அவனைப் பார்த்தும் இருக்கிறேன்!'

'அவரை எப்படியர்வது துரோகி என்று நிருபித்து தூமகேதுவின் பலிபீடத்தில் சாய்த்துவிட்டால். நாட்டில் குலசேகரனின் செல்வாக்கு நாசமாகும் என்று நினைத்தேன். ஆகவே சோலையப்பனைப் பின் தொடர்ந்தேன். அவரது செயல்கள் ஒவ்வொன்றையும் கவனித்தேன். பொன்னையா என்பவர் ஒரு சமயம் அரசரைக் கொல்ல வேல் ஏறிந்தார். அந்தப் பொன்னையாவின் நண்பர் அவர் என்பதைத் தெரிந்துகொண்டதும் என் திட்டம் விரைவில் நிறைவேறுமென்ற பூரிப்பு எனக்கு உண்டாயிற்று; சிரித்துப் பேசி சோலையப்பனின் சித்தத்தில் பதுங்கியிருக்கும் இரகசியங்களை அறிந்து, அவரைத் தூக்குமேடையில் நிற்க வைக்கவேண்டும் என்ற துடிப்பால், அந்தக் காளையோடு பழக ஆரம்பித்தேன்—காதலியைப் போல நடிக்கவும் தொடங்கினேன்! கள்ளங் கபடமறியாத வெள்ளையுள்ளங் கொண்ட சோலையப்பன் என் மயக்கு மொழியையும் மாய செய்கையையும் உண்மையென்று நம்பி உள்ளத்திலிருந்த இரகசியங்களையும் எதிர்கால திட்டங்களையும் என்னிடம் கொட்டிவிட்டார்! அவர் சொல்லியவை ஒவ்வொன்றையும் உடனுக்குடனே தூமகேதுவிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்! அப்படி இருக்கும்போது அவர் ஓர் இரவு என் இல்லத்திற்கு வந்தார்! காதல் துடிப்போடு வந்திருக்கும் அவரிடம் இரவு நேரத்தில் பேசாதே என்று சிதாரி தடுத்தாள்! என் உள்ள உறுதியை உன்னால் தெரிந்து கொள்ள முடியாதடி என்று அவளது எச்சரிக்கையை அலட்சியம் செய்துவிட்டு, உப்பரிகையில் அவரை அழைத்துச் சென்று பேசினேன்! பசி கொண்ட புலியாக அவர் மாறிவிட்டார்! நான் தடுத்தேன்—அடித்தேன் — வேண்டாம் விட்டு விடுங்கள் என்று கதறினேன்! அண்ணா. அன்றிரவு அவரது வெறியுணர்ச்சிக்கு நான் பலியாகிவிட்டேன்!...

முகத்தை மூடிக்கொண்டு செந்தாமரை தேம்பித் தேம்பி அழுதாள்.

வீரபாண்டியனின் உள்ளம் கொதித்தது. ஆனாலும், நடந்துவிட்டதற்கு இனி பதறி என்ன பயன் என்று தன் உள்ள உணர்ச்சிகளை வெளியே சிதருதபடி அடக்க முயற்சி செய்தான்.

'அன்றிரவு முதல் வீரபாண்டியனின் தங்கை என்பதைவிட, சோலையப்பனின் மனைவி என்ற எண்ணமே என் மனத்தில் அதிகமாயிற்று! அவரது நலத்தில் நாட்டம் செலுத்த வேண்டிய அளவிற்கு நான் கட்டுண்டவளாகிவிட்டேன்! மறுநாளே சோலையப்பன் தூமகேதுவினால் கைது செய்யப்பட்டார்! நான் அலறினேன்! அவரை விடுதலை அடையச் செய்ய, தூமகேதுவோடு சாகசங்கள் செய்யத் தொடங்கினேன்! நானொரு பொய்க் கதையைச் சொன்னேன்! அதை உண்மை என்று நம்பிவிட்ட தூமகேது எனக்கும் அவருக்கும் திருமணம் நடத்திவைத்தார்! இலங்கை அரசனால் குலசேகரன் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும் சிறையிலிருந்த அவரிடம் நான் ஓடினேன்! அஞ்சாதீர். என் அண்ணா இந்த மதுரையின் மன்னராகப் போகிறார், புதுவாழ்வு பெறப் போகிறோம். பூரிப்

புக் கடலில் நீந்தப் போகிறோம் என்று நான் சொன்னதும் அவர் முகம் கருத்தது! குலசேகரனைத் தவிர வேறு எவரையுமே மதுரையின் சிம்மாசனத்தில் அமர நான் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று கொக்கரித்தார்! நான் தவித்தேன்—தத்தளித்தேன்! சோலையப்பன் விசாரிக்கப்பட்டார்! தூக்குத் தண்டனையும் தரப்பட்டார்!'

'என்ன? என்ன? சோலையப்பனுக்குத் தூக்குத் தண்டனையா?'

'ஆமாம் அண்ணா. அவரது கல்லறைமீது விழுந்து நான் அழுதேன்! திருமேனியும் குலசேகரனும் என்னை அழைத்துப் பேசினார்கள்! வேறொரு ஆளைக் கல்லறையில் அடைத்து விட்டு சோலையப்பனை இரகசியமாகச் சேர நாட்டிற்கு அனுப்பி வைத்திருப்பதாகக் குலசேகரன் கூறினார்! மயானமாக இருந்த என் வாழ்க்கையை மல்லிகைத் தோட்டமாக்கித் தந்தார்! குலசேகரன் வீரபாண்டியனுக்கு மட்டுமல்ல அம்மா, எனக்குந்தான் நீ தங்கை என்று அழுத எனக்கு ஆறுதல் வார்த்தை புகன்றார்! 'போர் வெண்டாம் பூசல் வேண்டாம்! மாற்றாருக்கு அடங்கி நடக்கும் அவர் வாழ்வும் வேண்டாம்! பாண்டிய மண்டலம் இரண்டாகவே இருக்கட்டும்! அதன் ஒரு பகுதியை வீரபாண்டியன் ஆளட்டும்!' என்று அன்போடு என்னிடம் புகன்றார்!...'

'போதும் செந்தாமரை இன்னமும் பேசி என் உள்ளத்தைத் தீக்காடு ஆக்காதே! அன்பொழுக அவன் பேசியது அவ்வளவையும் நீ உண்மை என்று நம்பிவிட்டாயா?'

'ஆத்திரம் வேண்டாம் அண்ணா' அவர் எவ்வளவோ மாறிவிட்டிருக்கிறார்! தூமகேதுவின் அட்டகாசங்களால், ஏதாவது ஒரு சிறிய நாட்டிலாவது சுதந்திர அரசனாக இருந்தால் போதும் என்ற முடிவிற்கு வந்துவிட்டிருக்கிறார்! நாட்டின் நிலைமைகளை, அங்கிருந்தபடியே பார்த்துக்கொண்டிருப்பவள் நான்! ஆகவே அவரது சொல்லில் சிறிதும் சாகசமில்லை என்று தெரிந்துகொள்ள முடிகிறது! அண்ணா, தாயாதியர்களான நமக்குள் எதற்காகப் போர்? எதற்காகப் போர்க்களத்தில் வெட்டிச் சாய்த்துக்கொள்ள வேண்டும்? ......' என்று கண்ணீர் வழிய பேசிய செந்தாமரையை, வீரபாண்டியன் முறைத்துப் பார்த்தான்.

'என்னசொன்னாய், செந்தாமரை? போர் எதற்கா? போர்க்களத்தில் ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக் கொள்வது எதற்கா? அன்னக்கிளியின் வீட்டில் சபதம் செய்த நீயா—இவ்வளவு கோழையாகிவிட்டாய்! சோலையப்பன் உனது கணவன் — ஆகவே அவனது விருப்பப்படியே நீ நடந்து கொள் — நான் தடை சொல்லவில்லை தங்கை எனக்கே துரோகியாகிவிட்டாளே என்று கவலையடையவும் இல்லை! ஆனால் எந்தக் குலசேகரன் நம்மைப் பெற்ற தாய் தந்தையரைப் பதைக்கப் பதைக்க வாளால் வெட்டி இரத்த வெள்ளத்தில் மிதக்கச் செய்தானோ, அந்தக் குலசேகரனுக்காக மட்டும் பரிந்து பேசாதே! என்னால் தாள முடியாது!......சபதம் செய்துவிட்டு மதுரைக்குச் சென்றாய்! நமது தலைநகருக்குத் தங்கை புறப்பட்டுவிட்டாள்—மாற்றாரின் தலைகளை அறுத்துப் போட்டு, அதன்மீது இன்ப நடனம் புரியப்போகிறாள் — என்று

நினைத்து அப்பொழுது பூரித்தேன்! ஆனால் எண்ணியது நடைபெருமல் போனாலும் என் உள்ளத்தை மட்டும் புண்ணாக்கும் விதத்தில் பேசாதே! செந்தாமரை, பராக்கிரம பாண்டியனின் மகன் நான்! அந்தக் குலசேகரன் தரும் பிச்சையை ஒருநாளும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்! குலசேகரனின் அடாத செயலால், எனது இளகிய உள்ளம் புலியுள்ளமாக மாறிவிட்டது! எனது புலியுள்ளம் இப்பொழுது இரத்தவெறி பிடித்து அலைகிறது! நாடு வேண்டாம் — குலசேகரனின் இரத்தம்தான் எனக்கு வேண்டும்!''

''அண்ணா!''

''என்ன?''

''உங்கள் உள்ளம்...''

''புலியுள்ளந்தான். நீ என்ன சொன்னாலும் அது மாறப்போவதில்லை!'' என்று ஆத்திரத்தோடு சொல்லி அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

அவள் ஒன்றும் பேசாமல்—பேச முடியாமல்— அவ்விடத்தைவிட்டுக் கீழே இறங்கிச் சென்றாள், கன்னங்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோட!

3 –22
மாரிமுத்து கைது

ஆரண்ய மாளிகையினுள் நுழையும்போதே, தூமகேதுவின் மனம் துள்ளியது.

மாளிகையினுள்ளே மான்விழியாள் அஞ்சலை இருக்கிறாள் என்று நினைத்ததும், கரடு முரடாக மாறிவிட்டிருந்த அவன் மனதும், கூத்தாடத்தான் செய்தது!

மாடிப்படிகளில் ஏறிச்சென்றபோது. சுவர்க்க உலகத்திற்கே உயர்ந்து செல்வதாக அந்த நீறுபூசியின் உள்ளம் நிலைகொள்ளாமல் துள்ளியது.

சிவம் என்பான். சிவநெறி என்பான் அன்பே ஆண்டவன் என்று ஊருக்கு உபதேசம் செய்வான் அனைத்துயிரையும் அதுதான் இயக்குகிறது. இன்ப கொள்ளச் செய்கிறது என்று இயம்புவான்— அத்தகைய புராண பக்தன், இதோ புல்லனாக மாறி, அபலை ஒருத்தியைக் கசக்கியெறியத் துடிக்கிறான் —துள்ளும் உள்ளத்தோடு மளமள வென்று மாடியில் ஏறுகிறான்!

''பக்தா! நில்! எங்கே செல்கிறாய்? எதற்காக இவ்வளவு அவசரமாகச் செல்கிறாய்?......ஏன் விழிக்கிறாய்? நான்தான் — தெரியவில்லையா உனக்கு? நெற்றியிலே புனிதமான நீறும், நாக்கிலே என் நாமமும் கொண்ட நீயா—இத்தகைய பாவத்திற்கு பாதகச் செயலுக்குத் துணிவது? நீசனே நின் செயலால் என் பெயருக்கு அல்லவா மாசு ஏற்படும்! நில்! அடியெடுத்து வைத்தால் அப்படியே உன்னைச் சுட்டுப் பொசுக்கிவிடுவேன்! கன்னி மலரைக் கசக்கத் துணிந்துவிட்டாயே — ஒழுங்கீனமாகத் தூமகேது நடந்துகொண்டான் என்று உலகத்தார் கூறுவார்கள்? கூறமாட்டார்களே! கயிலைநாதனின் பக்தன் கயமைச் செயல் புரிந்தான் என்றல்லவா பகர்வார்கள்? பக்தர் கூட்டத்தில் பதராக நீ மாறி, அந்தப் பழிச்சொல்லை மற்றவர்மீதும் சுமத்தத் துணிகிறாய்? துன்மார்க்கா, துணியாதே! துன்பப்படுபள்ளத்தில் தூக்கியெறியப்படுவாய்! சுயநல வேட்டைக்காரா, சூதுக்காரா? நினைவில் இருக்கட்டும்—சூலம் என் கையிலிருக்கிறது!'' என்று கூறி, சிவபிரான் அந்தச் சிறுமதியாளனைத் தடுத்து நிறுத்தினாரா? இல்லை!

தமது அடியார்களான ரிஷிகளின் தாரங்களின்மீதே. ரிஷபம் ஏறுவோன் தாங்கொணா காமங்கொண்டபோது—என் எதிரியின் தங்கைமீது நான் ஆசைப்படுவது எந்த விதத்தில் தவறாகும், தகாத செயலாகும் — என்று தூமகேது நினைத்தானோ என்னவோ, வெறி பிடித்தவனைப்போல அஞ்சலையின் கையை அவன் பிடித்தான்!

பதுங்கிப் பதுங்கி வந்து திடீரென்று பாய்ந்து தன் கழுத்தைக் கடித்துக் கொல்ல வரும் பூனையைக் கண்டதும், பயந்து ஓடும் கிளியைப் போல, அஞ்சலை அவனது பிடியை உதறிக்கொண்டு அந்த அறையில் இப்படியும் அப்படியும் ஓடினாள்.

''ஓடினால் மட்டும் விட்டு விடுவேனா, ஒய்யாரியே!'' என்று கலகலவென்று தூமகேது, சிரித்தான்.

இப்பொழுது என்ன செய்வது— இந்த ஆபத்திலிருந்து எப்படித்தப்புவது — என்பது புரியாமல், அந்த மலர்க்கொடியாள் மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்தாள்.

''சேல் விழியாளே! சிவந்தமேனியாளே! சேரநாட்டு இளவரசனையா மணந்துகொள்ளப்போகிறாய்? பாண்டியநாட்டுக் கரும்பு, சேரநாட்டில் சுவைக்கப்படுவதா? அதை நான் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பேனா?...அஞ்சலை, அஞ்சாதே அருகில் வா! நான் மனிதன்தான்! இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், நான் மகானும் கூட! என் கரம்பட்டால், நீ கருகிவிடமாட்டாய்—காயா மரமாகிவிடமாட்டாய்! பத்தரைமாற்றுப் பதுமையே பயப்படாதே! பயனற்றுப் போய்விடுமே வாழ்வு என்று எண்ணாதே! முன்பு கூறினேன் அல்லவா, குலசேகரனின் பத்தினியாகுவதாக! இப்பொழுது சொல்கிறேன் —யாருக்குமே தெரியாத உண்மையை முதன்முதலாக உன்னிடம் சொல்கிறேன்! விரைவில் குலசேகரன் முடியிழக்கப்போகிறான்! அந்த முடி என் சிரசிற்கு வரப்போகிறது! அந்த மணிமுடியை. மலர்க்கோதாய் உன் மாணிக்கபிறை நெற்றியின்மீது அழகு செய்யச் சூட்டு

கிறேன்! சின்னஞ்சிறு சேர நாட்டின் ராணி ஆகத்தானே ஆசைப்பட்டாய் — அழகின் பெட்டகமே, உன்னை இந்த அகண்ட பாண்டிய மண்டலத்தின் பட்டத்தரசியாக்குகிறேன்! பார்! பார்! பாசத்தோடு என்னை ஒருமுறை பார்!'' என்று போதை நிறைந்த குரலில் பேசிக்கொண்டே, அவளைத் துரத்திப் பிடித்தான்.

''பாதகா! படுபாவி! என்னை விடு! விடு!'' என்று அவள் கதறினாள்.

கதறிய அவளை மலர்ச்செண்டு போல் தூக்கிக் கட்டிலில் போட்டான்.

''அய்யோ!'' என்று அவள் அலறினாள்.

கட்டிலின்மீது அவள் அருகில் அவன் உட்கார்ந்து அவளது இருதோள்களையும் கெட்டியாக அழுத்திப் பிடித்துக்கொண்டு, செவ்விதழ்களின் அருகே தன் கன உதடுகளைக்கொண்டு சென்றான்.

'அத்தான் அத்தான்!' என்று கனகசேனனை எண்ணியவாறு, தன் உடலைப் புரட்டினாள்.

'கருநாகமே, இதோ உன் கருத்தைக் கடித்து, இரத்தத்தைக் குடிக்கிறேன்!' என்று ஆவேசம் வந்தவளைப் போலக் கூவி கைகளைக் கட்டிலில் அங்கும் இங்கும் அழுத்தி எழுந்திருக்க முயன்றாள்.

கற்புக்காக அந்தக் கன்னிப் பெண் போராடிய நேரத்தில் தலையணையின் அடியிலிருந்த உடைவாள் அவள் கையில் சிக்கியது.

அவள் கையில் வாள் சிக்கியதைக் கண்டதும் தூமகேது அவளை விட்டுக் கட்டிலைவிட்டுக் கீழே இறங்கினான்.

'பேயனே. என் அருகில் நெருங்கினால் என்ன நேரிடும் தெரியுமா?' என்று அவள் உடைவாளைக் காட்டினாள்.

'உன்னால் என்னைக் குத்திக் கொன்றுவிட முடியும்என்று நினைக்கிறாயா?' பேதைப் பெண்ணே, உன்னால்மட்டுமல்ல இந்த உலகில் யாராலுமே என்னைக் குத்திக் கொல்ல முடியாது!' என்று அந்த மாமிசமலை இடி இடிப்பதைப்போலச் சிரித்தான்,

'உன்னைக் கொல்ல முடியாமல் போகலாம்! ஆனால் என்னை நானே சாகடித்துக் கொள்ள முடியும் அல்லவா? உன் வெறி பிடித்த கரங்களுக்கு என் பிணத்தைக் காணிக்கையாகத் தரமுடியும் அல்லவா? என்று அஞ்சலை வாளை தன் நெஞ்சுக்கு நேரே திருப்பிப் பிடித்துப்பேசினாள்.

யாரோ மாடிப் படிகளில் ஏறி வரும் சப்தத்தைக்கேட்டதும் தூமகேது பார்வையை அப்பக்கம் திருப்பினான்.

வேலைக்காரியான மருதாயி அந்த அறையினுள் நுழைவதைக் கண்டதும், 'சனியனே, நீ ஏன் இங்கு வந்தாய்? என்று தூமகேது ஆத்திரத்தோடு கத்தினான்,

நானா வரச் சொன்னேன் — அவனே தாங்கோ வந்தான்!' என்று அவள் ஏதோ உளற ஆரம்பித்ததும், அவள் அருகே சென்று செவிட்டுப் பிணமே என்ன செய்தி? என்று கேட்டான்.

'மாரிமுத்தாம்—உங்களை அவசரமாகப் பார்க்கவேண்டுமாம்'! என்று மருதாயி சொன்னதும், 'சரி, நீ போய் அவனை அங்கேயே இருக்கும் படிச் சொல் இதோ நான் வருகிறேன்!' என்று தூமகேது சொல்லி முடிப்பதற்குள், மாரிமுத்துவே அந்த அறையுனுள் வந்துவிட்டான்.

அவனைக் கண்டதும், தூமகேதுவின் மனம் திடுக்கிட்டது. ஆனாலும் அந்தத் திகைப்பை வெளியில் காட்டிக் கொள்ளாமல், 'மாரிமுத்து என்ன செய்தி?' என்று நிதானமாகக் கேட்டான்.

'அரசர் மதுரைக்கு வந்துவிட்டார்!......

'திருமேனி?'

'அரசியாரும் உடன் வந்திருக்கிறார்.

'சரி!'

'சோழ மன்னரிடமிருந்து ஏதோ ஓலை வந்திருக்கிறதாம்! அதனால் மிகுந்த ஆத்திரமடைந்திருக்கிறார்! எங்கிருந்தாலும் உடனே தங்களை அழைத்து வரும்படிக் கூறினார்! ஓடிவந்தேன்!' என்று மாரிமுத்து கூறிவிட்டு, அஞ்சலையைப் பார்த்தான்.

'சரி நீ போ—நான் வருகிறேன்!!

'இல்லை ஒற்றர் நாயகமே, மிகவும் முக்கியமான செய்தியாம் உடனே அழைத்துக்கொண்டு வரும்படிச் சொன்னார்!'

'சரி புறப்படு!' என்று தூமகேது அந்த அறையைவிட்டு முதலில் சென்றான். அவனைப் பின்தொடர்ந்த மாரிமுத்து, சிறிது நின்று 'அஞ்சலை! பயப்படாதே, இன்றே சேர நாட்டுக்குச் செய்தி அனுப்புகிறேன்!' என்று மெல்லக் கூறிவிட்டுச் சென்றான்.

ஆரண்ய மாளிகையைவிட்டு தூமகேது ஏறியிருந்த பல்லக்குப் புறப்பட்டது.

வழியில் ஒரு குளக்கரையின் மீது பல்லக்கை இறக்கச் சொல்ல, தூம கேது கீழே இறங்கி ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்தான்.

பல்லக்கோடு தொடர்ந்து வந்த போர் வீரர்களோடு வீரனாக கலந்து வந்த மாரிமுத்து, மரத்தடியில் உட்கார்ந்த ஒற்றர் நாயகத்தின் அருகே வந்தான்.

'உட்கார், மாரிமுத்து!'

'நாம் அவசரமாகச் செல்ல வேண்டுமே!

'பரவாயில்லை! பாண்டிய மன்னன் மிகவும் கோபமாக இருக்கிறாரா?'

'ஆமாம், ஒற்றர் நாயகமே— கோபத்தால் அவர் முகம் சிவந்து விட்டிருந்தது!'

'சோழ மன்னர் அந்த ஓலையில் என்ன எழுதியிருந்தார் என்பது உன்னால் யூகிக்க முடியவில்லையா!'

'திருமேனியைத் திருமணம்செய்து கொண்டது முறை அல்ல என்று எழுதியிருக்கலாம் என்று நினைக்கிறேன்! ஏனென்றால் திருமணம் என் சொந்த விஷயம், இதையெல்லாம் கட்டுப்பட்டுத்த இவர் யார்? என்று அவர் பாண்டிய ராசனிடம் கூறிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன்!'

அது சரி மாரிமுத்து, திருமேனியை அரசர் திருமணம் செய்து கொண்டது சரி என்று நீ நினைக்கிறாயா?'

'அதெப்படி ஒற்றர் நாயகமே சரியாகும்? நாமோ சைவர்கள்— இலங்கை இளவரசியோ பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள்! நடக்கலாமா இந்தத் திருமணம்?' என்று மாரிமுத்து கூறியதும், சிறிது தூரத்திலிருந்த போர் வீரர்களைத் தூமகேது கைதட்டி அழைத்தான்.

வீரர்கள் அருகே வந்ததும் மாரிமுத்துவைக் கைது செய்யுங்கள் என்று தூமகேது ஆத்திரத்தால் புருவங்கள் துடிக்கக் கூறினான்,

[வளரும்]

நேருவின் சாசனம்

நாடு என்பது இறவாததொன்று. மக்கள் வருவர், போவர்! ஆனால் நாடு தன்னுள் என்றும் அழியாத் ஆற்றல் ஒன்றை அடக்கி வைத துள்ளது.

குறுகிய நோக்கம் இறுதியில் வெற்றி பெறாது. இடையில் ஏற்படும் வெற்றி நிலையற்றது.

மனிதனுடைய உண்மையான நெறி உண்மையும் அமைதியும் நிறைந்த நெறியே.

வன்முறையில் செல்லும் வழி தீமை நிறைந்தது, வன்முறை தலை தூக்கி இருக்கும் இடத்தில் சுதந்திரம் நீண்டநேரம் தங்குவதில்லை.

வன்முறையை அறிவுறுத்தும் செயலை எந்த அரசாங்கமும் பொறுத்துக்கொள்ளாது!

-நேருபண்டிதர்.

கோவை மாவட்ட
கூட்டுறவு
நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நேசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில தரப்படுகின்றன. சிறந்த முறையில் நடாதுவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்.

நிர்வாகஸ்தினர்.

தபால் பெட்டி-8

தாராபுரம்.

கோவை மாவட்டம்

சந்து, பொந்துக்குள்.....

டெல்லியில் மொழிப் பிரச்சினை பற்றி நடந்த விவாதத்தில் முரட்டு மனிதர் மொரார்ஜி பேச பள்ளிக்கூடத்துப் பையன்போல அவருக்கு எதிரில் மாதவன் அமர்ந்து நீங்கள் என்ன தான் சொன்னாலும் இந்தி ஆதிக்கத்தைத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்று கூறினார்.

நீண்ட நாளாக அண்ணா அவர்கள் வித்திட்டு வளர்த்து வந்த வீர உணர்ச்சிதான் இது.

தமிழகஅரசு பொதுமக்களுடைய பேராதரவோடு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்தக் கட்சியை ஒழித்துவிடலாம் என்று எண்ணி அவர்கள் சட்டத்தின் துணைகொண்டு முயன்றபோது முடியவில்லை. அவர்கள் ஏச ஏச வளர்ந்தோம்–தாக்கத்தாக்க வளர்ந்தோம். இன்றைக்கும் தாக்குகிறார்கள், வசைபாடுகிறார்கள்.

உங்களுடைய பேராதரவோடு தி. மு. கழகம் சென்னைக் கோட்டையில் செங்கோல் ஓச்சுகிறது. இந்த நேரத்தில் அவர்கள் என்ன செய்தாலும் நாம் பெருந்தன்மையோடு இருக்கவேண்டும்.

நம்முடைய பொறுமையைச் சோதிக்கிற அளவுக்கு காங்கிரஸ் நண்பர்கள் பேசுவார்கள். மேடையேறி நம்முடைய தலைவர் அண்ணா அவர்களைப்பற்றி நமக்கெல்லாம் ஆத்திரம் வரும் அளவிற்குப் பேசுவார்கள். அதனால் மோதல் ஏற்படாதா? மறுநாள் கலவரம் ஏற்படாதா என்று எண்ணுகிறார்கள். அதனால் சட்ட அமைதி கெட்டு விட்டது என்று சொல்லி ஜனாதிபதி ஆட்சிவராதா என்று காங்கிரஸ் நண்பர்கள் திட்டமிட்டுப் பேசுகிறார்கள்.

காமராசர் சில நாட்களாக அவருடைய பேச்சை மாற்றி இருக்கிறார். ஏதோ இவருடைய தயவால் ஆளுவதுபோல, 'போனால் போகட்டும் ஐந்தாண்டுகாலம் ஆண்டுவிட்டுப் போகட்டும்!'' என்று பேசி இருக்கிறார்.

பத்திரிகைகளுடைய பாராட்டைப் பெற காமராசர் கற்றிருக்கிற ராஜதந்திரம் இது. எங்களுக்குத் தெரியாதா மறைமுகமாகக் காங்கிரஸ்காரர்கள் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டிருப்பது?

இழிமொழிகளைப் பேசுவார்கள். யாரும் ஆத்திரப்படாதீர்கள், வலுச் சண்டைக்கு வருவார்கள்! வம்பு இழுப்பார்கள்! உண்மையைப் புரிந்து கொண்டு ஒதுங்கி இருங்கள், கழகத்தைக் கட்டிக்காக்கின்ற பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது.

''சென்னைக்குத்தான் ஒரு படி அரிசியா? சேலத்துக்கு இல்லையா? கோவைக்குதான் ஒருபடி அரிசித்திட்டமா? கும்பகோணத்துக்கு இல்லையா? என்று கேட்கிறார்கள்.

இவர்கள் மதுவிலக்குச் சட்டம் கொண்டுவந்த நேரத்தில் பரீட்சார்த்தமாகச் சேலத்தில் கொண்டு வந்த பிறகுதான் படிப்படியாக மற்ற மாவட்டத்துக்குக் கொண்டு வந்தார்கள்.

தீவிரச் சாகுபடித் திட்டத்தை தஞ்சாவூர் மாவட்டத்தில் இரண்டொருகிராமங்களில் கொண்டுவந்து பார்த்துவிட்டு பிறகுதான் படிப்படியாகக் கொண்டு வந்தார்கள்.

ஒரு காலத்தில் காமராசர் முதல் மந்திரியாக இருந்தவர். அவர்தான் அண்ணாவின் ஆட்சியைப் பார்த்துக் ''கோவைக்கும் சென்னைக்கும்தான் படி அரிசியா? மற்ற இடங்களுக்கு இல்லையா? என்று கேட்கிறார்.

பொங்கலுக்குள் இந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் வரப்போகிறது என்று உணவு அமைச்சர் மதியழகன் அறிவித்திருக்கிறார்.

அதற்குப் பிறகு காங்கிரஸ் நண்பர்கள் வாய் மூடிக்கிடக்கிறது.

அரைகுறையாக அவர்கள் பஸ் போக்குவரத்தைத் தேசியமயம் ஆக்கியபோது நான் இன்னும் தீவிரமாகச் செய்யுங்கள் என்று சொன்னேன். இன்று பதவிக்கு வந்தபிறகு அதே காரியத்தை நாம் தீவிரமாக நடத்தும் பொழுது காங்கிரஸ்காரர்கள் பஸ் முதலாளிகளைத் தூண்டி விடுகிறார்கள், ''கோர்ட்டுக்கு போ!'' என்கிறார்கள். அவர்கள்தூண்டி விடுகிறார்கள் என்பதற்கு ஆதாரம் பஸ் முதலாளிகள் அரசாங்கத்தை எதிர்த்து வழக்குப் போட்டால் அதைக் கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் அவர்களுடைய பத்திரிகையில் போடுகிறார்கள். முன்பெல்லாம் நாங்கள் இப்படிப் போடுவது உண்டா? இன்று கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் அவர்கள் போடுகிறார்கள் என்றால் என்ன பொருள்?

அவர்கள் பஸ் முதலாளிகளைத் தூண்டி விடுகிறார்கள்; சட்டத்தின் சந்து பொந்துகளை வைத்துக் கொண்டு இந்த திட்டம் தவறு என்று கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப் படுமானால், உடனே கழக அரசு பஸ் முதலாளிகளைத் தப்பிக்கவிட்டு விடும் என்று கருதுகிறீர்களா?

இதிலே தவறு என்று கோர்ட்டு தீர்ப்பு வழங்குமானால் சட்டத்தின் சந்துபொந்துகளை அடைத்துவிட்டுத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்.

கழகத்தின் கொள்கையை அழித்துவிடலாம் பொசுக்கிவிடலாம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுவார்களேயானால் அவர்கள் அவர்களையே அழித்துக்கொள்பவர்களாக ஆவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் ௬௨-வது ௬௩ வது பிறந்த நாள் விழா கொண்டாடுகிற நேரத்தில், அவர் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமராக இருந்தாலும் ஆச்சரியம் இல்லை.

நம்முடைய இதயத்தைக் கவர்ந்த தலைவர் — ஏழைகளின் தலைவர்— ஆலைத் தொழிலாளிகளின் தலைவர்– விவசாயிகளின் தலைவர்.

அவரது பிறந்த நாள் விழாவில் அவருடைய ஆட்சியில் நாடு வாழ நலிவுதீர நாம் நம்பிக்கை பெற்று இருக்கிறோம்.''

★

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.